| | வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை<br>இணைந்து வழங்குபவர்கள்<br>பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை<br>ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும்<br>ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம் | | | | | |
|---|---|---|---|---|---|---|
| MSSRF<br>Science for Sustainable Development | மாவட்டம் : | **திண்டுக்கல்** | காலம் : | **03/07/2024** | முதல் | **07/07/2024** |
| | அறிக்கை எண் : | **053/ 2024** | வெளியீட்டு நாள் : | | **02/07/2024** | |

## திண்டுக்கல் மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 33°-40° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 25°-27° செல்சியஸ் ஆகவும் பதிவானது. மேலும் மழை பெறப்பட்டது.

| கடந்தவார வானிலை (27.06.2024முதல் 01.07.2024) | | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு – 07-07-2024- 08.30 வரை | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 27/06 | 28/06 | 29/06 | 30/06 | 01/07 | தேதி | நாள்-1 03/07 | நாள்-2 04/07 | நாள்-3 05/07 | நாள்-4 06/07 | நாள்-5 07/07 |
| 0.7 | 0.4 | 0.0 | 0.1 | 2.2 | மழை (மி.மீ) | 5 | 7 | 4 | 7 | 1 |
| 35 | 33 | 39 | 40 | 39 | அதிக பட்ச வெப்பநிலை (செல்) | 37 | 36 | 35 | 35 | 34 |
| 27 | 25 | 27 | 26 | 27 | குறைந்த பட்ச வெப்பநிலை (செல்) | 26 | 25 | 25 | 24 | 24 |
| 7 | 3 | 3 | 5 | 6 | மேக மூட்டம் (ஆக்டா) | 7 | 8 | 7 | 8 | 8 |
| 83 | 65 | 68 | 63 | 82 | அதிக மற்றும் குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (சதவீதம்) | 70 | 70 | 70 | 70 | 70 |
| 56 | 44 | 44 | 65 | 50 | | 40 | 40 | 50 | 40 | 50 |
| 11 | 16 | 10 | 4 | 9 | காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 12 | 10 | 12 | 8 | 10 |
| வட மேற்கு | மேற்கு | மேற்கு | வட கிழக்கு | மேற்கு | காற்றின் திசை | மேற்கு | மேற்கு | மேற்கு | மேற்கு | மேற்கு |

## குறுஞ்செய்தி :

மாவட்டத்தின் ஒரு சில இடங்களில் ஜூலை 3, 4, 5, 6 மற்றும் 7 தேதி லேசான மழைக்கு வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலையானது 34°-37° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலையானது 24°-26° செல்சியஸ் ஆகவும் பதிவாகலாம். வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். மணிக்கு 8 முதல் 12 கி.மீ வேகத்தில், மேற்கு திசையிலிருந்து காற்று வீசக்கூடும்.

## பொது ஆலோசனை:

### அடுத்த வாரத்திற்கான விரிவாக்கபட்ட வரம்பு வானிலைமுன்னறிவிப்பு(05-11 ஜூலை 2024):

### மழைப்பொழிவு :

05-07-2024 - 11-07-2024: நீட்டிக்கப்பட்ட வரம்பு கணிப்புகளின்படி, வரும் வாரத்தில் மாவட்டத்தில் இயல்பானது முதல் இயல்பை விட சற்று கூடுதலான மழை பெய்ய வாய்ப்பு உள்ளது.

### அதிகபட்ச வெப்பநிலை :

05-07-2024 - 11-7-2024: மாவட்டத்தில் அதிகபட்ச வெப்பநிலையானது பொருத்தமட்டில் பொதுவாக இயல்பை ஒட்டியே காணப்படும். 26° செல்சியஸ் முதல் 32° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு

### குறைந்தபட்ச வெப்பநிலை :

05-07-2024 - 11-07-2024: மாவட்டத்தில் குறைந்தபட்ச வெப்பநிலையை பொருத்தமட்டில் இயல்பை ஒட்டியே காணப்படும். 20° செல்சியஸ் முதல் 24° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு.

### எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்

### முக்கிய பயிர்கள் : கொய்யா, தென்னை, கால்நடை.

### கொய்யா:

கொய்யா பழப் பயிரில் தேயிலைக் கொசுவின் தாக்குதல் பரவலாக தென்படுகிறது. இதன் தாக்குதலின் அறிகுறிகள் இலைகள் மற்றும் கொய்யா பழங்களில் காணப்படும்.

பாதிக்கப்பட்ட செடியின் பாகங்களை வெட்டி அகற்றி சூரிய ஒளி நன்கு உள் செல்லும் படி கவாத்து செய்தல் வேண்டும்.

இதனைக் கட்டுப்படுத்த 10 லிட்டர் தண்ணீருக்கு 50மில்லி வேப்ப எண்ணெய் உடன் 10மில்லி புங்கம் எண்ணெய் என்ற அளவில் சேர்த்து கலந்து தெளிக்கவும்.

### தென்னை:

தென்னையில் கருந்தலைப் புழுவின் தாக்குதல் பரவலாக தென்படுகின்றது. இது அனைத்து வயதிலுள்ள மரங்களையும் தாக்குகிறது. மரத்தின் அடிப்பகுதிகளில் உள்ள ஓலைகளை அதிகம் தாக்குவதால் கொண்டையின் மேற்பகுதியல் உள்ள 3-4 ஓலைகளைத் தவிர மற்ற ஓலைகள் அனைத்தும் காய்ந்து போய் விடும்.

ஓலையின் அடிப்பகுதியில் உள்ள பச்சையத்தைச் சுரண்டி இப்புழுக்கள் தின்று விடும். அதிகமாகத் தாக்கப்பட்ட மரங்கள் எரிந்து தீய்ந்து போனது போல் தென்படும்.

இதனைக் கட்டுப்படுத்த ஒரு மரத்திற்கு 75 மில்லி தண்ணீரில் 25 மில்லி பிப்லோனில் மருந்தினைக் கலந்து வேர் வழியாக கொடுக்க வேண்டும்.

### கால்நடை:

ஆடு வளர்க்கும் விவசாயிகளின் கவனத்திற்கு. ஆடுகளின் எடை அதிகரிக்கவும், ஆட்டுகுட்டிகளின் இறப்பை தவிர்க்கவும் குடற்புழு நீக்கம் செய்வது மிகவும் அவசியமாகும்,

பொதுவாக ஜீலை முதல் செப்டம்பர் மாதங்களில் தட்டைப் புழுக்களுக்கான குடற்புழு நீக்க மருந்துகளை கொடுக்க வேண்டும்,

அருகிலுள்ள கால்நடை மருத்துவரை அணுகி தங்களது ஆடுகளுக்கு குடற்புழு நீக்க மருந்தினை கொடுக்கவும்.